
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1046

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

41



# தமிழ்நாடு! - அச்சமும் இல்லை, ஆபத்தும் இல்லை!

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

இந்திய அரசியலமைப்பின் பிரிவு-30 சிறுபான்மையினர் தாங்கள் விரும்பும் கல்வி நிறுவனங்களை நிறுவவும் நிர்வகிக்கவும் உரிமை அளிக்கிறது. இதன்படி, மதம் அல்லது மொழியின் அடிப்படையில் அனைத்து சிறுபான்மையினருக்கும் அவர்கள் விரும்பும் கல்வி நிறுவனங்களை நிறுவவும் நிர்வகிக்கவும் உரிமை உண்டு. உதவி வழங்கும்போது எந்தவொரு கல்வி நிறுவனத்துக்கும் அதன் சிறுபான்மை அந்தஸ்தின் அடிப்படையில், அரசு பாகுபாடு காட்ட முடியாது என்றும் அப்பிரிவு கூறுகிறது.

## அச்சுறுத்தப்படும் சிறுபான்மை நிறுவனங்கள்!

ஆனால், கடந்த 10 ஆண்டுகளாக ஒன்றிய பா.ஜ.க. அரசு சிறுபான்மைச் சமூகத்தினரின் கல்வி நிறுவனங்களை நசுக்க, அனைத்து விதமான முயற்சிகளையும் செய்துகொண்டு இருக்கிறது. அசாமில், உள்ளூர் இந்துத்துவக் குழு ஒன்று கிறிஸ்துவ பள்ளிகளை, பதினைந்து நாள்களுக்குள் அகற்ற வேண்டும் என்று கூறியது. மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கரில் கிறிஸ்துவப் பள்ளிகளின் வாயில்களில், சரஸ்வதி சிலையை வைக்குமாறு வற்புறுத்தப் பட்டனர். இந்த ஆண்டு பிப்ரவரியில் அஸ்ஸாமில், மேகாலய அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக இருந்த பிரபல கல்வியாளர் மஹ்பூபுல் ஹொக், தேர்வு மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டி கைது செய்யப்பட்டார்.

2024-இல் இருந்தே அஸ்ஸாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா இவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை வைத்துக்கொண்டே இருந்தார். அதே நாளில் ராஜஸ்தானில், மௌலானா ஆசாத் பல்கலைக்கழகத்தின் தலைவர் முகமது ஆதி கௌரி கைது செய்யப்பட்டார். உத்தரப் பிரதேசத்தில் முகமது அலி ஜவஹர் பல்கலைக்கழகத்தை மூட, அம்மாநில பா.ஜ.க. அரசு எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதன் நிறுவனர் அஜாம் கான் 2019-ஆம் ஆண்டு முதல் சிறையில் உள்ளார். டெல்லி ஜாமியா மிலியா பல்கலைக்கழகத்தில் திட்டமிட்டு பதற்றமான சூழலை இந்துத்துவவாதிகள் கடந்த சில ஆண்டுகளில் உருவாக்கியுள்ளனர். இப்படி இந்தியா முழுக்க, சிறுபான்மை சமூக கல்வி நிறுவனங்களும் கொடுந்தாக்குதலுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன.

## நிரந்தர அந்தஸ்து!

அதற்கு நேர்மாறாகத் தமிழ்நாட்டில் சிறுபான்மை நிறுவனங்களின் பாதுகாப்பும், உரிமைகளும் கடந்த நான்கரை ஆண்டுகளில் திராவிட மாடல் அரசால் பலப்படுத்தப் பட்டுள்ளன. குறிப்பாக, சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கு வாழ்நாள் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கை. அதை ஏற்று, சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள், சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் பெறுவதை எளிதாக்கி, விரைவாக வழங்கும் வகையில், 2023-ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் தலைமைச் செயலாளர் தலைமையில் அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் ஒப்புதல் பெற்று சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, 2024-ஆம் ஆண்டு முதல் இதுவரை 312 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் 246 சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர அந்தஸ்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல, பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் முஸ்லிம் பெண்களுக்காக தி.மு.க. அரசால் கடந்த காலங்களில் விடுதிகள் தொடங்கப்பட்டு, தற்போது அதன் எண்ணிக்கை 18 சிறுபான்மையினர் நல விடுதிகளாக அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த விடுதிகளில் ரூ.14 லட்சம் செலவில் செம்மொழி நூலகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், ஒன்றிய அரசோ கல்வி நிறுவனங்களை மட்டும் முடக்கவில்லை. சிறுபான்மையின மாணவர்களின் ஆராய்ச்சிப் படிப்புக்கு உதவும் மௌலானா ஆசாத் திட்டத்துக்கு கடந்த சில ஆண்டுகளாக நிதி விடுவிக்கவில்லை. சிறுபான்மையினர் சமூக மாணவர்களுக்கு ‘ப்ரீ மெட்ரிக்’ உதவித்தொகை வழங்க, 433 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என 2023-24 நிதியாண்டில் அறிவிக்கப்பட்டது. அது, 2024-25 நிதியாண்டில் 326.16 கோடி ரூபாயாகக் குறைந்தது.

2025-26 நிதியாண்டில் 195.70 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, சிறுபான்மையினர் கல்வி தொடர்பான 6 திட்டங்களுக்கு 2023-24 நிதியாண்டில் 1,689 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டு, 428.74 கோடி ரூபாய் மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது. 2024-25 நிதியாண்டில் 1,575.72 கோடி ரூபாய் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதில் 517.20 கோடி ரூபாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. 2025- 26 நிதியாண்டில் ஆண்டு ஒதுக்கப்பட்டிருப்பதே 678.03 கோடி ரூபாய்தான்.

> 2024-ஆம் ஆண்டு முதல் இதுவரை 312 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் 246 சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர அந்தஸ்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## உரிமையும் நலன்களும்!

ஆரிய பா.ஜ.க. அரசுக்கு நேர்முரணாக தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையின மாணவர்கள், உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெறும் கனவை நனவாக்கும் உதவித்தொகை திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் உலகப் புகழ்பெற்ற க்யூஎஸ் (QS) தர வரிசைப் பட்டியலில் முதல் 250 இடங்களுக்குள் உள்ள வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் அல்லது கல்வி நிறுவனங்களில் முதுகலை படிக்கலாம். அதற்காக தலா ரூ.30 லட்சம் வரை கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. அதேபோல, இஸ்லாமியர், கிறிஸ்துவர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதத்தைச் சேர்ந்த அரசு, அரசு உதவி பெறும் மற்றும் ஒன்றிய, மாநில அரசால் அங்கீகரிக்கப் பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவர்களுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

சிறுபான்மையினர் சமூகப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் உயர்கல்விக்குச் சென்றாலும் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களில் மாதம் 1,000 ரூபாய் வழங்கப் படுகிறது.

இப்படி சிறுபான்மையின கல்வி நிறுவனங்களின் உரிமைகளையும், சிறுபான்மையின மாணவர்களின் கல்வி நலன்களையும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியின் பேரபாயச் சூழலுக்கு மத்தியில், துணிந்து பாதுகாத்து நிற்கிறது திராவிட மாடல் அரசு.

...நீளும்

## அரசு திட்டங்களின் பெயரில் பா.ஜ.க.-வின் வசூல் வேட்டை!

கடந்த 2021-22 காலகட்டத்தில், ‘ஸ்வச் பாரத் திட்டம்’, ‘பேட்டி பச்சாவ்’, ‘பேட்டி படாவ் திட்டம்’, ‘கிசான் சேவா திட்டம்’ போன்ற ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு NARENDRAMODI.IN, NAMO APP மூலம் நன்கொடைகள் வசூலிக்கப்பட்டன.

ஆனால், வசூலிக்கப்பட்ட தொகை எதுவும் அரசுக்குப் போகவில்லை என்று ஆதாரங்களை அம்பலப்படுத்தியுள்ளார் மூத்த பத்திரிகையாளர் அரவிந்தாக்ஷன்.

‘இந்த செயலிகளுக்குச் சென்றால், எந்தத் திட்டத்துக்கு நன்கொடை வழங்க விரும்புகிறீர்கள்? ஸ்வச் பாரத் திட்டமா, கிசான் சேவா திட்டமா? என்று திட்டங்களின் பட்டியல் உள்ளது. அதில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, நன்கொடை வழங்கினால், அரசு ரசீதுக்குப் பதிலாக பா.ஜ.க. ரசீது வழங்கப்படுகிறது. அதாவது, அரசு திட்டங்களின் பெயரில், பா.ஜ.க. வசூல் வேட்டை நடத்தியுள்ளது’ என அரவிந்தாக்ஷன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக, ‘ஸ்வச் பாரத்’ திட்டத்தைச் செயல்படுத்தும் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேள்வி எழுப்பிய அவருக்கு, “நாங்கள் எந்த நன்கொடையும் வசூலிக்கவில்லை” என்று பதிலளிக்கப்பட்டுள்ளது. அடுத்து, பேட்டி பச்சாவ், பேட்டி படாவ் திட்டத்தைச் செயல்படுத்தும் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் துறையிடம் கேட்டிருக்கிறார். நாங்கள் எந்த இணையத்துக்கும், ஆப்களுக்கும் அனுமதி கொடுக்கவில்லை என்று அத்துறையில் இருந்தும் பதில் வந்துள்ளது.

தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்திடம் கேள்வி எழுப்பியபோது, ‘நமோ செயலிக்கும், NARENDRAMODI.IN இணையத்துக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவை அரசு செயலியோ, இணையமோ இல்லை’ என்று சொல்லிவிட்டனர். அரசுத் திட்டங்களின் பெயரில், பா.ஜ.க.-வின் வசூல் வேட்டை அம்பலமானதையடுத்து, சென்னை காவல் துறையிலும், சிபிஐயிலும் புகார் அளித்திருக்கிறார் பத்திரிகையாளர் அரவிந்தாக்ஷன்.

## ஃப்ளாஷ்பேக்





இரா.அண்ணாதுரை

### தலைவரின் கம்பீரமான பேச்சு!

1989-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருவண்ணாமலை மாவட்டம் உருவாக்கப்பட்டது. அதற்குப் பின்னர், செப்டம்பர் 30-ஆம் தேதி அன்றைய தமிழக முதல்வர் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்துக்கு வருகை புரிந்தார். தலைவர் தலைமையில் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்போது, தலைவரின் பாதுகாப்புக்காக தொண்டர் அணியில் பணியாற்றினேன். இந்தப் புகைப்படத்தைப் பார்க்கும்போது, தலைவர் கலைஞர் அவர்களின் கம்பீரமான பேச்சு நினைவுக்கு வரும். தலைவர் கலைஞர் அவர்களின் புகழ் ஓங்குக!

– இரா.அண்ணாதுரை, கிளைக் கழகச் செயலாளர், மு.நகர தொண்டர் அணி, மேல் கச்சிராப்பட்டு, திருவண்ணாமலை தெற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்வருக

### எதிர்ப்பு வாரம்!

1965-ஆம் ஆண்டு ஜனவரி 8 அன்று சென்னை, அறிவகத்தில் கழகத்தின் தலைமைச் செயற்குழு கூடியது. இந்தி ஆட்சிமொழியாகும் நாளான ஜனவரி 26 துக்க நாளாகக் கடைப்பிடிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மிகுந்த பொறுப்பு உணர்வோடும், விரிவாக விவாதித்தும் அந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதேநாளில் மேற்கு வங்கத்திலும் ஒரு வார காலம் எதிர்ப்பு வாரமாக கடைப்பிடிக்க அங்குள்ள அரசியல் கட்சிகள் அறைகூவல் விடுத்தன.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.